(3) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் இரண்டு மூன்று நாட்களாக ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்று நாட்களாக மின்சாரம் வரவில்லை ; விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் நோட்டீஸ் கொடுத் திருக்கிறார்கள். திருநெல்வேலி பற்றி வரும்போது நீங்கள் பேசலாம்.

Thiru DURAIMURUGAN: I want an explanation from the Hon. Finance Minister.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றி அரசு தீவிரமாகக் கவனம் செலுத்திவருகிறது என்றாலும் இந்தப் பிரச்னைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருப்பதால், நாளை அதை எடுத்துக்கொண்டால் முழு விபரங்களும் சொல்ல வாய்ப்பாக இருக்கும். இப்போது அரசு அதுபற்றி தீவிர கவனம் செலுத்தி, எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. நாளையதினம் இதை எடுத்துக்கொண்டால் இதைப் பற்றிய கருத்துக்களை வழங்க வாய்ப்பு ஏற்படும்.

திரு. துரைமுருகன் : எங்களுக்கு ஒரு நாளைக்கு நூறு தந்திகள் வருகின்றன. நாங்கள் ஊருக்குப் போக முடியாது. நான்கு நாட்களாக அங்கே பம்ப் செட்கள் ஓடவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிலைமை என்ன என்பதுபற்றி இப்போதே சொல்ல வேண்டும். நான்கு நாட்களாக அங்கே பம்ப் செட்கள் ஓடவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாகர்கோவிலில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. அதை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10.20)

திரு. துரைமுருகன் : நாம் இரண்டு ஒத்திவைப்புத் திர்மானங்களை ஒரே நாளில், ஒரு திர்மானத்தை முன்மொழிந்துவிட்டு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல், இதையும் இதையும் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

1982 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும், ஒரு நாளைக்கு 2 அல்ல, 3 அல்ல, 4 ஒத்திவைப்பு தீர்மானங்களைக்கூட எடுத்துக் கொள்ளலாம். ஆனால், பிரச்சினை அதுவல்ல. இப்போது நிதி நிலை அறிக்கையின் மேல் விவாதிக்கிறோம். ஒவ்வொரு கட்சியிலும் ஒரு உறுப்பினராவது பேசுவதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்று தினசரி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைபாட்டை போக்குவதற்கு என்னால் முடியவில்லை. அதற்கான நேரமும் இல்லை. இப்போது மணி 10.20 ஆகிறது. ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு உறுப்பினர் பேசியிருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கையின்மீது பேசும்போது, நிச்சயமாக எல்லாவற்றையும் பற்றி பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பலர் ஆளுங் கட்சியிலே இருந்தும், இந்தப் பக்கத்திலே எதிர்வரிசையிலே இருந்தும் பேச விரும்புகிறார்கள். அதற்கான நேரத்தை என்னால் ஒதுக்க முடியவில்லை. ஆகவே நான் ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் என்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நிதி நிலை அறிக்கையின்மீது விவாதம் முடிந்து, நிதி அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கின்ற வரையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதில்லை என்பதுதான் இதுவரையிலும் சபையின் மரபாக கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவேதான் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், குமரி மாவட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பதால், அதை உடனடியாக எடுத்துக் கொண்டோம், நேற்று, திரு, பெ, சு, திருவேங்கடம் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் கரண்ட் வரவில்லை. என்பது பற்றிக் கொடுத்திருக்கிறார். அதேபோல், திருவாளர்கள் பலராமன் துரை முருகன் திரு. அழகிரிசாமி ஆகியவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்படி எல்லா உறுப்பினர்கள் பெயர்களையும் சொல்லி விடுகிறேன். பத்திரிகைகளில் அவர்கள் பெயர்கள் வந்தால் நல்லது என்பதற்காக அதற்கு பதிலளிக்க அமைச்சர் தயாராக வேண்டும். எனவே இன்றைக்கு குமரிமாவட்டம் துப்பாக்கிச் சூடு பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை மட்டும் எடுத்துக் கொள்வதற்கு, உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

திரு. துரைமுருகன்: வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள பிரச்சினையும் மிகவும் முக்கியமானது. இதனால். அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த தி.மு.க. எம். எல். எக்கள் எங்களுடைய கட்சித் தலைவர் அவர்களின். ஒப்புதலோடு வெளிநடப்புச் செய்கிறோம்.

(வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தி. மு. க. உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்).

[1982 மார்ச் 3]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே கடந்த ஒரு வார காலமாக மின்சாரம் இல்லை என்ற பிரச்சினை அமைச்சருக்கும் தெரியும், அவைக்கும் தெரியும். அதைப் போக்குவதற்காக இங்கே விவாதிக்க விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு பொருளாதாரத்தில் சீரழிவு ஏற்படுகின்ற நிலையைப்பற்றி விவாதிக்க முடிவு எடுக்காமல் நாளை என்று ஒத்திவைப்பது சரியா என்ற கேள்வியை நாங்களும் எழுப்பி நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. இல. பலராமனும் மற்றும் சிலரும் வெளிநடப்புச் செய்தனர்).

(முற்பகல் 10.30).

திரு. அ. ரகுமான்கான் : நான் உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பரிசீலனையில் இருக்கிறது,

(2) ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) அரசினர் கொள்கை பற்றிய முடிவை பேரவையில் அறிவிக்காது முதலில் மேலவையில் அறிவித்தது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையினுடைய கவுரவத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். எனவே, அதுபற்றிய பாயின்ட் ஆப் ஆர்டர் அரசாங்கம் எந்த முடிவை எடுத்தாலும், இந்த அவையிலே அந்த முடிவுகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்குமானால், இங்கே கட்டாயமாக அதைச் சொல்லிவிட்ட பிறகு, வேறு எங்காவது சொல்ல வேண்டும். ஆனால், சமீபத்தில் மின்சார பட்ஜெட் மீது இங்கே விவாதம் நடந்திருக்கிறது. அரசாங்கத்தின் முக்கியமான கொள்கை, அதாவது 5 வருஷ காலத்திற்கு எலக்ட்ரிசிடி போர்டிலே இருக்கக்கூடிய என்ஜீனியர்கள் செல்ப் எம்ப்ளாய்மென்ட் அதாவது சுய வேலை தேடிகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டால், அவர்களுக்கு 5 ஆண்டுகள் லீவ் கொடுப்பது என்றும், அதேபோல் ஒரு குறிப்பிட்ட ஓர்க்கசில் ஒரு பகுதியினருக்குமட்டும், பென்ஷன் கொடுப்ப என்றிருக்கிறது. இதை எல்லோருக்கும் எக்ஸ் டன்ட் பண்ணவேண்டும் என்பதுபோன்ற முக்கியமான பிரச்னைகளை, இங்கே மின்சார பட்ஜெட்மீது விவாதம் நடக்கும்போது சொல்லாமல், மேலவையிலே சொல்லபட்டிருக்கிறது. இது இன்றைக்கு இந்த அவையின் கவுரவத்தைக் குறைப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS